# ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியில் 69வது குடியரசு தினவிழா கொண்டாட்டம்

இடம் : நிரவி நாள் : 26.01.2018

ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியில் 26.01.18 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் 69வது குடியரசு தினவிழாவானது, சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்குப் பள்ளியின் தாளாளர் திரு. கண்ணன் அவர்கள் தலைமை ஏற்று சிறப்புச் செய்தார். பள்ளியின் முதல்வர் திரு. சுவாமிநாதன் அவர்களும், துணை முதல்வர் திரு. எட்வின் சாமுவேல் அவர்களும் சிறப்பான முறையில் வழிநடத்திச் சென்றனர். இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக ஓய்வுப் பெற்ற தலைமை ஆசிரியர் திரு. சீத்தாராமன், OPS SMC உறுப்பினர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புச் செய்தார்.

தொடர்ந்து, சிறப்பு விருந்தினர், அவர்கள் இந்திய நாட்டின் பெருமை மிகுந்த தேசியக் கொடியினை ஏற்றி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, பாரதத்தாயின் உருவ படத்திற்கு மலர் தூவி வணக்கம் செய்யப்பட்டது. அடுத்து, நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர் மற்றும் தேசிய மாணவர்படை அணிவகுத்து செல்ல சிறப்பு விருந்தினர்கள் அம்மரியாதையை ஏற்றுக்கொண்டனர், பின் பள்ளியின் வழிபாட்டுப் பாடலுடன் விழாவின் அனைத்து நிகழ்வுகளும் தொடங்கப்பட்டது. பள்ளியின் சார்பாக மாணவன் செல்வன். அஸ்வின் எழில் மணி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அடுத்த நிகழ்வாக, பள்ளியின் தாளாளர் திரு. கண்ணன் அவர்கள், சிறப்பு விருந்தினர் அவர்களை பெருமைப்படுத்தும் நோக்கில் நினைவுப் பரிசினை வழங்கினார். தொடக்க கல்வி மாணவர்கள் சார்பில் அனைவரையும் வரவேற்கும் விதத்தில் வரவேற்பு நடனம் ஒன்று நிகழ்த்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாணவ இசைக்கலைஞர்கள் நம் தாய் நாட்டின் பெருமையை ஒவ்வொருவரும் உணரும் வகையில் பாடல் ஒன்றினை இசைத்தனர். தொடர்ந்து, மாணவி ஆ. ஹரிணி தமிழ்மொழியிலும், மாணவி ஸ்ரீஹரிணி ஆங்கில மொழியிலும் நம் நாட்டின் குடியரசு நாள் சிறப்பு நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினர்.

பள்ளி முதல்வர் அவர்கள் குடியரசுத் தின சிறப்புரையில், நம் தாய் நாடானது, விடுதலைப் பெற்றதில் தொடங்கி குடியாட்சிப் பெற்ற நாள் வரை நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளையும், நம் பாரதப்

பிரதமர் மோடி அவர்கள் நம் நாட்டின் வளர்ச்சிக்காக மேற்கொண்டிருக்கும் வளர்ச்சித் திட்டங்களையும் அனைவரின் மத்தியிலும் பகிர்ந்து கொண்டார்.

அவரைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் அவர்கள் குடியரசு நாள் தொடர்பான பல வரலாற்று நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டார். அப்பகிர்வில், நம் நாட்டின் சிறப்புகளை பட்டியலிட்டு அவற்றின் பெருமைகளையும் முக்கியத்துவத்தைம் எடுத்தியம்பினார். குடியரசுத் தலைவர், மூவர்ணக்கொடி, இந்திய இராணுவம், ஒவ்வொரு குடிமகனும் கடைபிடிக்க வேண்டிய நாட்டுப்பற்று போன்ற, நிலைப்பாடுகளை முன்னிறுத்தி எழிச்சியுரையாற்றி அங்கு குழுமியிருந்த அனைவரையும் எழுச்சிப்பெறச் செய்தார். விருந்தினர் அவர்கள் ஆற்றிய உரையானது, அனைவரையும் வாரலாற்றுச் சிறப்பு மிக்க காலங்களுக்கு நம்மை அழைத்துச் சென்றது.

இறுதியாக, பள்ளி மாணவர்கள் சார்பில் செல்வி. ஆரியா M. நாயர் அனைவருக்கும் நன்றி நவில, ஆசிரியர்கள் மற்றும் அலுவலக அலுவலர்களின் ஒத்துழைப்போடு நாட்டுப்பண்ணுடன் இவ்விழாவனது, செவ்வனே நிறைவுற்றது.